மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.14/2019

வாக்குமூலம்: பி.வா.சா.1 மகேஸ்வரி

27.08.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்பட்டு

குறுக்கு விசாரணை :– உங்களுக்கு இந்த வழக்கு விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். தாவாச்சொத்தில் 4/5 பங்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். வாதி ஈஸ்வரனுக்கு 1/5 பங்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். தாவா கிணறு சர்வே எண்.825/7 பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆரம்பத்தில் தாவாச்சொத்து அந்தோணிமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். அவரிடமிருந்து ஈஸ்வரனும், அதன்பின்பு உங்கள் கணவரும் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். ஈஸ்வரன் உங்கள் கணவரின் அண்ணன் என்றால் சரிதான். தாவாச்சொத்து பாகம் பிரிக்கப்படாத பொதுச்சொத்து என்றால் சரிதான். தாவாச்சொத்து முழுவதும் உங்கள் கணவர் சோலார் மின் வேலி அமைத்தார் என்றால் உங்கள் கணவர் வாதி ஈஸ்வரனுக்கு மேல்புறத்தில் தடம் விட்டு மீதமிருந்த இடத்திற்குத்தான் வேலி அமைத்தார். நீங்கள் தடம் விடாமல் தாவா சொத்து முழுவதற்கும் வேலி அமைத்ததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது தவறு. இந்நீதிமன்றத்தில் வழக்கு முடிவுறும் வரை தாவாச்சொத்தில் அமைக்கப்பட்ட வேலியை அகற்றி வைக்கவேண்டுமென இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விபரம் தெரியும் என்றால் தெரியும். அதன்பிறகு தாவாச்சொத்தில் அமைக்கப்பட்ட மேற்படி வேலியை முழுமையாக அகற்றவில்லை என்றால் சரிதான். ஆனால் மேல்புறத்தில் இருந்த வேலியை முழுமையாக அகற்றிவிட்டோம். வாதி ஈஸ்வரன் மேல்புறத்தில் மட்டும் சென்றுவர வேண்டுமா, என்றால் இல்லை. கிணற்றை சுற்றிலும் அவர் சென்றுவர உரிமை உள்ளது. அதை நாங்கள் மறுக்கவில்லை. தாவாச்சொத்துக்கு கிழபுறத்தில் வாதி ஈஸ்வரனுக்கு வேறு நிலம் உள்ளது என்றால், நாங்கள் வேலி போட்டு 10 மாதங்கள் கழித்து கிரையம் வாங்கியுள்ளார். இவ்வாறு ஈஸ்வரன் வேலி போட்டு 10 மாதம் கடந்த பிறகு கிழபுறத்தில் நிலம் வாங்கியதாக குறிப்பிட்டு எதிர்வாதத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு உங்கள் கணவர் ஈஸ்வரன் மற்றும் அவருடைய தாயார் காளியம்மாள் மீது தாவாச்சொத்தை பொறுத்து ஒரு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் நீங்கள் தரப்பினராக சேர்ந்து வழக்கை நடத்தினீர்கள் என்றால் சரியல்ல. அந்த வழக்கை தொடர்ந்து நடத்தாமல் தள்ளுபடிக்கு விட்டுவிட்டீர்கள் என்றால் சரியல்ல. அந்த விபரம் எதுவும் எனக்கு தெரியாது. நீங்கள் வேலி அமைத்துள்ளதால் ஈஸ்வரன் கிணற்றை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளார் என்றால் சரியல்ல. நீங்கள் தடுப்பதால் ஈஸ்வரன் அவருக்குரிய பாக தண்ணீரை எடுத்து

பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளார் என்றால் சரியல்ல. அவர் தென்னை விவசாயம் செய்கிறார் என்றால் சரிதான். தாவா கிணற்று நீரை வைத்துத்தான் மேற்படி தென்னை விவசாயம் செய்கிறார் என்றால் சரிதான். அவ்வாறு நீங்கள் தண்ணீர் எடுக்க தடை செய்வதால் அவருக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அவர் தற்போதுவரை தண்ணீர் எடுத்து பயன்படுத்தித்தான் வருகிறார். தாவாச்சொத்து உங்களுக்கும் ஈஸ்வரனுக்கும் பொதுவில் பாத்தியப்பட்டது என்ற நிலையில் அவரை தடுக்க உங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு தென்புறத்தில் உங்களுடைய நிலம் உள்ளது என்றால் சரிதான். வடபுறத்தில் ஆறுமுகம் நிலம் உள்ளது. தாவா கிணறு சம்பந்தப்பட்ட வாதி நிலம் கிணற்றுக்கு மேல்புறத்தில் உள்ளது என்றால் சரிதான். வாதி தாவா கிணற்றுக்கு கிழபுறத்தில் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா கிணறு மற்றம் காலியிடம் வழியாக வாதி மேற்கில் உள்ள அவருடைய நிலத்திலிருந்து கிழக்கில் கிரையம் பெற்ற நிலத்திற்கு செல்லக்கூடாது என வேலி போட்டுள்ளீர்கள் என்றால் அவ்வாறு இல்லை, நாங்கள் வன விலங்குகள் நிலத்திற்குள் வராமல் இருக்கவும் 3ம் நபர்கள் நிலத்திற்குள் வராமல் இருக்கவும் பாதுகாப்பிற்காக வேலி போட்டுள்ளோம். நீங்கள் உங்களுடைய பாக பூமிக்கு வேலி அமைக்கவில்லை என்றால் சரியல்ல, வேலி அமைத்துள்ளோம். அங்குள்ள அனைத்து விவசாயிகளும் அவரவர் நில அத்துக்களில் வேலி அமைத்துள்ளார்கள். நீங்கள் உங்கள் பூமிக்கு தனியாக வேலி அமைத்துள்ளதால் கிணற்றுக்கு வேலி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. என் கணவரின் தாயார் காளியம்மாள் உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். இறந்துபோன உங்கள் கணவருக்கு அவருடைய தாயார் காளியம்மாள் ஒரு வாரிசு என்றால் சரிதான். நீங்கள் இந்த வழக்கு விரோதத்தின் காரணமாக வாதிதான் உங்கள் கணவரை கொலை செய்ததாக பொய்யாகக் கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. வாதிதான் கொலை செய்துள்ளார். அந்த குற்ற வழக்கு விசாரணையில் உள்ளது என்றால் சரிதான். நீங்கள் உண்மைக்கு மாறாக பொய்யாக எதிர்வாதம் செய்கிறீர்கள் என்றால் சரியல்ல. வாதி வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u> இல்லை.

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

R. KARTHIKEYAN

Digitally signed by R. KARTHIKEYAN
Date: 2024.08.27 16:40:38 +0530

District Munsif,
Palani.